# எறும்பும் புறாவும்

ஒரு காட்டில் ஒரு கட்டெறும்பு ஆற்றுத் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா, இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.

எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக் கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்கியது; இலையில் இருந்த அந்த எறும்பு, கரையில் ஏறி தப்பியது. புறாவுக்கும் நன்றி கூறியது

மற்றொரு நாள்.

அந்தக் காட்டுக்கு ஒரு வேடன் வந்தான். அவன் அந்தப் புறாவைக் கொல்ல நினைத்தான். அவன் தன்னுடைய வில்லில் அம்பை வைத்து, புறாவைக் குறிபார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் புறாவோ இதை அறியாமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தது. இதை எறும்பு பார்த்து விட்டது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது அந்தக் கட்டெறும்பு.

விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது.

கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் கையில் இருந்து வில் நழுவியது. வில்லில் இருந்து பாய்ந்து சென்ற அம்பு, குறி தவறி வேறு எங்கோ விழுந்தது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கு ஏற்படவிருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது. எறும்புக்கும் நன்றி சொன்னது

எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியை அடுத்தவருக்குச் செய்ய வேண்டும். அதே போல் அடுத்தவர் நமக்குச் செய்த உதவியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது.